## சூரியவெவ பிரதேச சபை
## அம்பாந்தோட்டை மாவட்டம்

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 31 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 31 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆகஸ்ட் 31 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து சூரியவெவ பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

வருமானம் மற்றும் செலவினங்கள் அட்டுறு அடிப்படையில் கணக்கு வைக்கப்படுவதாக வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும், முதலீட்டு வட்டிக்காசு அடிப்படையில் கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

கீழ்வரும் தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ள கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டினுள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த மற்றும் வெகுமதியாக கிடைத்திருந்த ரூபா 131,547 தொகையான சொத்துக்கள் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நீர் கொலகலனின் பெறுமதி ரூபா 15,714 இனால் குறைத்து மூலதனமாக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டினுள் மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 11,074 கூட்டுத்தொகையான மீண்டெழும் செலவினங்கள் மூலதன சொத்துக்களாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

#### 1.3.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள 2 கணக்கு விடயங்களின் மீதிகள் மற்றும் அதற்குரிய புத்தகங்கள், ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் காண்பிக்கப்பட்டுள்ள மீதிகளுக்கிடையே ரூபா 267,563 கூட்டுத்தொகையான இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

#### 1.3.4 தொங்கல் கணக்கு

முன்னைய ஆண்டின் இறுதியில் உள்ளபடியான ரூபா 589,543 தொகையான தொங்கல் கணக்கின் செலவு மீதியினை இனங்கண்டு உரிய சீராகங்களை மேற்கொண்டு கணக்கை தீர்ப்பனவு செய்ய மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**1.3.5 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

**(அ) பெற வேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான 300 நீர் வாடிக்கையாளர்களிடமிருந்து ரூபா 403,454 தொகையான நீர்ப் பட்டியல் கட்டணங்கள் அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்டது.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

i. மீளாய்வாண்டின் இறுதியில் நானாவித கடன் கொடுத்தோர் மற்றும் கைத்தொழில் கடன்கொடுத்தோர் மீதிகள் முறையே ரூபா 1,207,976 தொகை மற்றும் ரூபா 15,170,137 தொகையாக இருந்ததுடன், அந்த மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

ii. 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக சபையின் தீர்க்கப்படாத பொறுப்புக்களின் கூட்டுத்தொகை ரூபா 16,466,967 ஆகும்.

**1.3.5 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

ரூபா 18,600,000 கூட்டுத்தொகையான காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பில் உரித்துறுதிகள் / கையளிப்புக் கட்டளைகளும் சமர்ப்பிக்கப்பட்டிராமையால், கணக்காய்வின் போது அவற்றை திருப்திகரமாக பரிசீலிக்க முடியாதிருந்தது.

**1.3.7 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள்**

கீழே விபரிக்கப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதி 193 | பாதிடப்பட்ட நிதியேற்பாடுகள் மற்றும் குறைநிரப்பு மதிப்பீடுகளுடன் இணக்கம் செய்து ஒவ்வொரு வருமான விடயங்கள் மற்றும் செலவின விடயங்களின் கீழான மிகைகள் மற்றும் பற்றறாக்குறைகள் தொடர்பான விடயங்களை தெளிவுபடுத்தும் கூற்றொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கை சனநாயக குடியரசின் நிதிப்பிரமாணம் 571(3) | 2013 மற்றும் 2014 ஆகிய ஆண்டுகளுக்குரிய காலாவதியான ரூபா 264,239 தொகையான கைத்தொழில் பிடிகாசு தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2015 ஒக்தோபர் 09 ஆந் திகதிய PFD/RED/2015/08 பொது (i) ஆம் இலக்க பொது நிதிச் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் 4.3 (உ) பிரிவு | சேவையிலிருந்து ஓய்வூதியம் பெற்றுச் சென்றுள்ள இரு உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 73,600 தொகையான கடன் தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களுக்கமைய 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 6,657,170 ஆக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 471,652 ஆகும். அதன் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 7,128,822 ஆன அதிகரிப்பொன்றினை காட்டியது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன

(அ) மீளாய்வாண்டின் மொத்த மீண்டெழும் வருமானத்தில் 87 சதவீதமான உயர்வான பெறுமானத்துடனான செலவினங்கள் காணப்பட்டதுடன், அது நிதி முகாமைத்துவம் தொடர்பில் திருப்திகரமான நிலையொன்றல்ல என்பது கணக்காய்வாரின் எண்ணமாகும்.

(ஆ) ஒவ்வொரு வருடத்தினதும் வருமான உதவிகளின் பெறுவனவுகளின் அதிகரிப்பொன்றினை காட்டிய போதிலும், முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டிற்கான சுயமாக உருவாகும் வருமானங்களில் குறைவொன்றினை காட்டியது.

### 2.3 வருமான நிர்வாகம்

#### 2.3.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

**2016** திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான சபையின் வருமானம் சேகரித்தல் செயன்முன்னேற்றம் தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்காக பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா 6.46 மில்லியனாக இருந்ததுடன், அவற்றுள் 3.08 மில்லியன் சேகரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் வருமானம் சேகரித்தலிலான செயன்முன்னேற்றம் 48 சதவீதமாகும்.

(ஆ) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் பெற வேண்டிய வருமான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2.99 மில்லியனாக இருந்ததுடன், அவற்றுள் 0.78 மில்லியன் அறவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நிலுவை வருமானத்தை அறவிடுவதிலான செயன்முன்னேற்றம் 26 சதவீதமாக இருந்தது.

#### 2.3.2 வீதவரியும் வரியும்

(அ) கடை வாடகை

சபைக்குச் சொந்தமான 40 கடைகளிலிருந்து 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக ரூபா 847,550 தொகையான வாடகை மற்றும் ரூபா 91,005 தொகையான தாமதக் கட்டணங்கள் அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்டது. அந்த நிலுவை மீதிகளை அறவிடுவதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 159 (1) ஆம் பிரிவிற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சேகரிப்பு பணம்

(i) 2010 திசெம்பர் 27 ஆந் திகதிய தபபா/பபாகொ/2010/01 ஆம் இலக்க உள்ளுராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையின் 4 ஆம் பந்திக்கமைய சேகரிக்கப்படும் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமையால் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக ரூபா 350,992 தொகையான சேகரிப்பு பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ii) சூரியவெவ வாரச்சந்தைக்கு அண்மையிலுள்ள 26 கடைத் தொகுதிகளின் வரிசையின் ஏழு கடை உரிமையாளர்களிடம் சூரியவெவ பேரூந்து தரிப்பிடத்திற்கு அண்மிய கடை உரிமையாளர் ஒருவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 292,592 கூட்டுத்தொகையான சேகரிப்புப் பணங்கள் 2011 ஆம் ஆண்டு முதல் நிலுவையாக காணப்பட்டது.

(இ) எழுத்துமூல உடன்படிக்கைகளை கைச்சாத்திடல்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 173 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எழுத்துமூலமான உடன்படிக்கைகளை கைச்சாத்திடாமல் சபைக்குச் சொந்தமான 04 கடைகள் வாடகைக்கு விடப்பட்டிருந்தன.

**2.3.3 அனுமதிப்பத்திர கட்டணம்**

61 வியாபார அலகுகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 38,250 தொகையான வியாபார வரி மற்றும் நிலுவைக் கட்டணங்களை அறவிடுவதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 149,150,151 மற்றும் 152 ஆகிய பிரிவுகளுக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3.4 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதம செயலாளரினதும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான நீதிமன்ற தண்டப்பணங்களுக்காக ரூபா 2,621,656 மற்றும் முத்திரைக் கட்டணத்திற்காக ரூபா 189,000 தொகை பெறவேண்டியதாக காணப்பட்டது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

**3.1.1 வீதி விளக்குகளின் பராமரிப்பு**

2010 ஆகஸ்ட் 17 ஆந் திகதிய பீஈ/01/01 ஆம் இலக்க மின்வலு மற்றும் வலுச்சக்தி அமைச்சின் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கிணங்க மின்சார சபைக்கு விண்ணப்பித்து அதிகாரப் பிரதேசத்தினுள் தாபிக்கப்பட்டுள்ள வீதி அதிகாரச்சட்டங்களை முறைமைப்படுத்தாமையால் சபையின் நிதியத்தினால் பராமரிக்கப்படும் 1583 வீதி விளக்குகளில் 531 விளக்குகளுக்காக மாத்திரம் கட்டணங்கள் மீளளிக்கப்பட்டிருந்தது.

**3.1.2 சுவீகரிக்கப்படாத சொத்துக்கள்**

சபையினால் பயன்படுத்தப்பட்டவாறு உள்ள 8 காணிகளின் சட்டரீதியான உரித்தினை கையேற்பதற்குரிய நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

### 3.2 விளைவற்ற சொத்துக்கள்

2016 யூன் மாதம் ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்டிருந்த ரூபா 625,000 தொகையான கெப் வண்டியொன்று பழுதுபார்க்கப்பட்டு ஓட்டத்தில் ஈடுபடுத்துவதற்கு 2017 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 சூரியவெவ மீன் சந்தையை நிர்மாணித்தல்

புரநெகும செயற்திட்டத்தின் கீழ் 2016 பெப்ரவரி மாதமளவில் நிர்மாணித்து பூர்த்தி செய்யப்பட்டிருந்த மீன் சந்தை 2017 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் பிரதேசத்தின் மக்களின் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 திண்மக்கழிவு முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையினால் சேகரிக்கப்படும் குப்பைகளின் ஒரு பகுதி மனுதாகல பிரதேசத்தில் அமைந்துள்ள 05 ஏக்கர் பரப்பளவான நிலப்பகுதிக்கு சுமார் 13 வருட காலமாக சிரமமின்றி கொட்டப்பட்டமையால் பிளாஸ்டிக்,கண்ணாடிகள், மட்பாண்டங்கள் மற்றும் டயர்களில் நீர் தேங்கியிருந்ததுடன், அதன் மூலம் ஈ மற்றும் நுளம்புகள் உள்ளடங்களாக நோயை உருவாக்கும் நோய்க்கிருமிகளின் பெருக்கத்திற்கு இடமளிக்கப்பட்டிருந்தது.

(ஆ) நிலப்பிரதேசத்தின் ஒரு பகுதியை குப்பைகளை எரிப்பதற்காக பயன்படுத்தப்பட்டிருந்ததுடன், அதன் மூலம் சூழலுக்கு தீங்கு விளைவிக்கும் வாயுக்கள் வெளிவிடப்படுகின்றதா என்பது தொடர்பிலும் கதிர்வீச்சுடைய கழிவுகளின் மூலம் சூழலுக்கு போன்றே உயிரினங்களுக்கு ஏற்படக்கூடிய அபாயம் தொடர்பில் கவனம் செலுத்தாது திறந்த வெளியில் அந்த பொருட்கள் கொட்டப்பட்டிருந்தன.

(இ) நிலத்தைச் சுற்றி பாதுகாப்பு வேலியொன்று நிர்மாணிக்கப்பட்டிராமையால் யானைகள், கால்நடைகள் மற்றும் ஏனைய காட்டு விலங்குகள் குப்பைகள் கொட்டுமிடத்திற்கு நுழைந்திருந்ததுடன், வெளிவாரித் தரப்பினராலும் இந்த நிலப்பிரதேசத்திற்கு குப்பைகள் கொட்டப்பட்டிருந்தது.

(ஈ) சேகரிக்கப்படும் குப்பைகளை பயன்படுத்தி கூட்டெரு உற்பத்தி செய்யும் பணிகள் 2017 பெப்ரவரி 08 ஆந் திகதி வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. கூட்டெரு உற்பத்தி செயற்திட்டத்தின் வலை வேலிக்காக 2011 திசெம்பர் 30 ஆந் திகதி கொள்வனவு செய்யப்பட்டிருந்த பொருட்களின் கிரயம் ரூபா 101,500 ஆக இருந்த ஒரு பகுதி தொலைந்து போயிருந்ததுடன், மேலும் ஒரு பகுதி பிரதேச சபையின் வளாககத்தில் அமைந்துள்ள இடத்தைச் சுற்றிலும் வேலி அமைப்பதற்காகவும் பயன்படுத்தப்பட்டிருந்தது.

### 3.5 பதவியணியினர் நிர்வாகம்

மீளாய்வாண்டின் திசெம்பர் இறுதியில் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை விஞ்சி 06 பதவிகளில் 12 ஊழியர்களுக்கான மிகையொன்றும் மற்றுமொரு பதவியொன்றின் பற்றாக்குறையொன்றும் நிலவியது. மிகையான பதவிகளை முறைமைப்படுத்துவதனைப் போன்று வெற்றிடங்களை நிரப்புவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்**

**பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டிற்கான பாதீட்டில் உள்ளடக்கப்பட்டுள்ள 49 செலவின விடயங்களின் ரூபா 5,265,000 கூட்டுத்தொகையான மொத்த நிதியேற்பாடும், மேலும், 05 செலவின விடயங்களின் ரூபா 27,545,396 கூட்டுத்தொகையான சேமிப்புக்களும், 03 வருமான விடயங்களுக்குரிய ரூபா 14,958,734 தொகையான அடையப்படாத இலக்குகளும் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிர்வாகம்
(இ) நிலையான சொத்துக்கள் கட்டுப்பாடு
(ஈ) பாதீட்டுக் கட்டுப்பாடு